# தமிழ்நாடு அரசு தமிழ்க்கொத்து

**(தமிழ் விசைப்பலகைகள் – எழுத்துருக்கள்)**

## அறிமுக உரை

16-பிட்டு தமிழ் யூனிக்கோடு எழுத்துரு (Unicode) மற்றும் தமிழ் அனைத்து எழுத்துருக்கான (TACE16) நிர்ணயம் செய்து தமிழக அரசு அரசாணை ஒன்றினை *[*தமிழக அரசாணை எண்*: G.O. (Ms) No.29]* 23.6.2010 அன்று வெளியிட்டது.

அந்த அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, எழுத்துரு (Fonts), எழுத்துரு மாற்றி (Fonts Converter), விசைப்பலகை இடைமுக இயக்கி (Keyboard Driver) ஆகியவற்றை உருவாக்குவதற்காக ஒரு தொழில்நுட்ப வல்லுநர்க் குழுவினை அமைத்தது.

இக்குழு, விரிவாக விவாதித்து யூனிக்கோடு குறியேற்றம் (Unicode Encoding) மற்றும் தமிழ் அனைத்துரு எழுத்துரு குறியேற்றம் (TACE16 Encoding) ஆகியவற்றுக்கான தமிழ் எழுத்துரு (Tamil fonts) மற்றும் தமிழ் விசைப்பலகை இடைமுக இயக்கி (Tamil Keyboard Interface) போன்ற மென்பொருள்கள் விண்டோஸ் (Windows), மேக்கின்தோஸ் (Macintosh), லினக்ஸ் (Linux) ஆகிய இயக்குதளங்களில் பயன்படுமாறு கீழ்கண்டுள்ள எழுத்துரு மற்றும் விசைப்பலகைகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்தது.

**(i) Tamil Fonts:**

| | **Unicode** | **TACE16** |
|---|---|---|
| Even Thickness | TAU-Barathi | TAC-Barathi |
| Thick & Thin | TAU-Valluvar | TAC-Valluvar |
| Script | TAU-Kambar | TAC-Kambar |
| Fixed | TAU-Kaveri | TAC- Kaveri |
| Headline | TAU-Kabilar | TAC-Kabilar |

*The words Regular, Italic, Bold and BoldItalic for the respective Type styles.*

**(ii) Tamil Keyboard Interface:**

The Tamil99 and Typewriter keyboard drivers for

- Windows XP & later,
- Mac OS X,
- Linux

- On-screen keyboard for IE, Firefox, Safari, Opera and Chrome browsers

தற்பொழுது, பத்து தமிழ் எழுத்துருக்களும் (Tamil Fonts – 10 numbers). விண்டோஸ் (Windows), லினக்ஸ் (Linux) மற்றும் மேக்கின்தோஸ் (Macintosh) இயக்குதளங்களில் பயன்படுத்துவதற்கான தமிழ் விசைப்பலகை இடைமுக இயக்கிகளும் (Tamil Keyboard Interfaces) உருவாக்கி இணையதளத்தில் வெளியிட தொழில்நுட்ப வல்லுநர்க் குழு பரிந்துரைத்தது.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு தமிழ்க்கொத்து (தமிழ் விசைப்பலகைகள் – எழுத்துருக்கள்) மென்பொருள்கள் இவ்வலைத்தளத்தில் வெளியிடப்படுகிறது.

தமிழக அரசும் இந்த தமிழ் விசைப்பலகைகள் மற்றும் எழுத்துருக்களை அனைத்து அரசு துறைகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அங்கீகரித்து அதற்கான அரசாணை ஒன்றினை வெளியிட்டுள்ளது. (தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆணை. G.O.Ms. No.5 நாள் 26.3.2013)